*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 99/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.சரண்யா க/பெ. சத்தியராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.08.2025.**

துவக்க நேரம் 12.20 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம், விசுவக்குடியில் உள்ள எனது அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கும், எனது கணவருக்கும் 06.03.2011 அன்று திருமணம் நடைபெற்று, நானும், எனது கணவரும் எனது கணவரின் வீடான ஆணையம்பட்டியில் ஒன்றாக வசித்து வந்தோம். நாங்கள் ஒன்றாக வாழ்ந்த காலத்திலேயே எனது உடன்பிறந்த அண்ணனின் மனைவி நித்யாவை, எனது கணவர் இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார். நித்யாவும், எனது கணவரும் ஈரோட்டில் தங்கி பனியன் கம்பெனியில் வேலை செய்து வந்த நிலையில், நானும், எனது அம்மாவும் அவர்களை ஈரோட்டில் பிடித்துவிட்டோம். அப்பொழுது என் கணவர், என்னையும், எனது அம்மாவையும் அடித்தது சம்மந்தமாக ஈரோடு பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2) மேற்படி பிரச்சனை சம்மந்தமாக நான், திருச்சி IG அலுவலகத்தில் புகார் கொடுத்து, அந்த புகார் பெரம்பலூரில் உள்ள SP ஆபிசிற்கு வந்து, அங்கிருந்து நானும், எனது கணவரும் ஆத்தூரில் உள்ள ஆணையம்பட்டியில் இறுதியாக வசித்ததால், எனது புகாரானது ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு நான் கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் நித்யா,

சத்தியராஜை விசாரணைக்கு கடந்த 03.02.2013 அன்று அழைத்து அவர்களுக்கு உரிய அறிவுரை சொல்லி, எனது கணவரை, என்னுடன் ஒன்றாக வாழ அனுப்பிவைத்தார்கள்.

3) நான் மீண்டும், எனது கணவருடன் வாழ எனது கணவரின் வீட்டிற்கு சென்றபொழுது எனது மாமனார், என்னை வீட்டிற்குள்ளே செல்லவிடாமல் வீட்டின் கதவை பூட்டிவிட்டார். அப்பொழுது எனது கணவர், என்னை கையால் அடித்தும், காலால் எனது வயிற்றில் எட்டி உதைத்தார். மேலும் ஆஜர் எதிரி நித்யா, எனது போன் நெம்பரை 10 நபர்களிடம் கொடுத்து தகாத முறையில் பேசச்சொல்லியதன் பேரில் அந்த 10 நபர்களும், என்னிடம் தகாத முறையில் பேசினார்கள். நான் இது சம்மந்தமாக மீண்டும் அரும்பாவூரில் கொடுத்த புகார் பேரில் ஆஜர் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி புகாரானது மீண்டும் ஆத்தூருக்கு மாற்றப்பட்டு ஆஜர் எதிரிகள் மீது ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மீண்டும் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

4) என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி சத்தியராஜ் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது கணவர், என்னை ஆணையம்பட்டியில் வைத்து அடித்து கொடுமைப்படுத்தினாரா என்றால் ஆணையம்பட்டியிலும் அடித்தார், ஈரோட்டிலும் அடித்தார். என்னை, எனது கணவர் ஆணையம்பட்டியில் அடித்தது சம்மந்தமாக எங்கு புகார் கொடுத்தேன் என்றால் கெங்கவல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2) கெங்கவல்லி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு சி.எஸ்.ஆர் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் நான் கொடுத்த புகாரில் என் கணவர் ஆஜர்

ஆகாததால் அந்த புகாரின் மீது மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. கெங்கவல்லி, ஈரோடு பெருந்துறையில் கொடுத்த புகார்களில் எனது கணவர் எனக்கு இழைத்த கொடுமைகள் குறித்து நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) எனது கணவர் எனக்கு இழைத்த கொடுமையினால் நான், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதற்குரிய ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் இல்லை, நான், எனது கணவர் எனக்கிழைத்த கொடுமைகள் குறித்து நான் கொடுத்த புகாரில், எனக்கு வழங்கிய CSR–ல் எனது கணவர், எனக்கிழைத்த கொடுமைகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

4) எனது கணவரையும், எனது அண்ணியையும் போலிசார் பிடித்தார்களா என்றால் இல்லை, நானும், எனது அம்மாவும்தான் பிடித்தோம். 2ம் எதிரி நித்யா, எனது அண்ணன் மனைவியா என்றால் ஆமாம். 2ம் எதிரிக்கும், அவரது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்தார்களா என்றால் இல்லை.

5) 2ம் எதிரி நித்யா, எனக்கு என்ன உறவுமுறை என்றால் மாமன் மகள். எனது அண்ணனுக்கும், அவரது மனைவியான 2ம் எதிரிக்கும் இடையே ஜீவனாம்ச வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. 1ம் எதிரி, 2ம் எதிரியை திருமணம் செய்துகொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் நான் வைத்துள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் செய்த குற்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

6) 1, 2 எதிரிகள் தவறான தொடர்பு வைத்திருந்ததற்கு ஆவணம் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அவர்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்ததை பார்த்த சாட்சிகள் இவ்வழக்கில் சாட்சியம் சொல்ல வருவார்கள். 2ம் எதிரியின் கணவர், தனது மனைவி, 1ம் எதிரியுடன் தவறான தொடர்பில் உள்ளார் என்று புகார் எதுவும் இதுவரை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

7) எனக்கும், 1ம் எதிரியான எனது கணவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றாலும், 2ம் எதிரிக்கும், அவரது கணவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று சொன்னாலும், 2ம் எதிரி தன் கணவர் மீது நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எங்களது குடும்பத்தில் சொன்னார் என்றால் சரியல்ல, எனக்கும், எனது கணவருக்கும் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் கருத்துவேறுபாடு எதுவும் ஏற்பட்டதில்லை.

8) மேற்படி ஜீவனாம்ச வழக்கிலிருந்து எனது அண்ணனை காப்பாற்ற வேண்டி, இந்த வழக்கினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, அப்படியொரு வழக்கே எனது அண்ணனுக்கு எதிராக இல்லை. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை, எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், ஒரு சில சங்கதிகளை சுருக்கமாக சொல்லியுள்ளேன்.

9) நான் சொல்லும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எனது வழக்கு பொய் என்பதால் நான், எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனது வழக்கு உண்மையான வழக்கு. நான் சொன்னதுபோல் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல, நான் பெரம்பலூரில் எனது கணவருக்கு எதிராக ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து, அதில் எனக்கு ஆதரவாக உத்தரவு பெற்றுள்ளேன்.

**2ம் எதிரி நித்யா தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 2ம் எதிரி நித்யாவிற்கும், எனது அண்ணன் சதிஷ்–க்கும் கடந்த 2008ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அவர்களுக்கு பிறந்த குழந்தைக்கு தற்பொழுது 16 வயது இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகாரை முதன்முதலில் எங்கு கொடுத்தேன் என்றால் கெங்கவல்லி காவல் நிலையத்தில் கொடுத்தேன்.

2) பெரம்பலூர், மாவட்ட கண்காணிப்பாளரிம் புகார் கொடுத்தேனா என்றால் பெரம்பலூர் மாவட்ட IG யிடம் கொடுத்துவிட்டு, பின்பு கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். ஆத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) 2ம் எதிரி, 1ம் எதிரி ஆகிய இருவரும் அக்கா, தம்பி உறவுமுறை என்றால் சரிதான். 2ம் எதிரி நித்யா, எனது அண்ணன் சதிசை விட்டு பிரிந்து 15 வருடங்கள் ஆகிறது என்று சொன்னால் சரிதான், எனது பிரச்சனைக்கு பின்புதான் எனது அண்ணனும், அண்ணியும் பிரிந்தார்கள். எனக்கும், எனது கணவருக்கும் கடந்த 2011ம் வருடம்தான் திருமணம் ஆனது என்றால் சரிதான். 6 மாதங்கள் நானும், எனது கணவரும் சந்தோஷமாக குடும்பம் நடத்தினோம் என்று எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் முதல் 6 மாதகாலம் சந்தோஷமாகவும், அடுத்த 6 மாத காலங்கள் சண்டை சச்சரவுகளுடனும் எனது கணவருடன் குடும்பம் நடத்தினேன்.

4) எனது அண்ணன் சதிஷ், 2ம் எதிரிக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் எதிரி, 1ம் எதிரியுடன் தவறான தொடர்பில் இருந்திருந்தால், 2ம் எதிரியின் கணவர் அது சம்மந்தமாக புகார் கொடுத்திருந்திருப்பார் என்றாலும், அவ்வாறு தவறான தொடர்பு எதுவும் 2ம் எதிரிக்கு, 1ம் எதிரியுடன் இல்லை என்பதால்தான் அவரது கணவர் இது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5) 2ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருடன், எனக்கு ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாகவும், எனது அண்ணனை காப்பாற்றவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2ம் எதிரிக்கு எதிராக இந்த வழக்கினை பொய்யாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.13 17:41:08 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC. 99/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-2 (LW-2)***

*Name / Father's Name: **திருமதி.மலர்கொடி க/பெ. கலியபெருமாள்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.08.2025.**

துவக்க நேரம் 01.26 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரம்பலூர் மாவட்டம், விசுவக்குடியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2011ம் வருடம் எனது மகளுக்கும், 1ம் எதிரிக்கும் திருமணம் செய்துவைத்தோம். எனது மருமகன், எனது மருமகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு என் மகளை கொடுமைப்படுத்தினார்.

2) எனது மருமகனான 1ம் எதிரி, எனது மருமகளான 2ம் எதிரியை கூட்டிக்கொண்டு ஈரோட்டில் தங்கி பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்றுவந்தார். நாங்கள், அவர்கள் வேலை செய்யும் கம்பெனிக்கு சென்று விசாரித்தபொழுது, அவர்கள் கணவர், மனைவி என்று சொல்லி அந்த கம்பெனியில் வேலை செய்து வந்தார்கள் என்று தெரிந்து அவர்களை பிடித்தோம்.

3) இது சம்மந்தமாக ஈரோடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நாங்கள் அவர்களை இங்கிருந்து அனுப்பிவிடுகிறோம், நீங்கள் திருச்சி IG அலுவலகத்தில் புகார் கொடுக்கச்சொன்னார்கள். அதன் பேரில் நாங்கள் திருச்சி IG அலுவலகத்தில் கொடுத்த புகாரானது பெரம்பலூர் SP அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து அரும்பாவூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

4) அரும்பாவூர் காவல் நிலையத்தில், 1, 2 எதிரிகளை அழைத்து விசாரித்தபொழுது, 1ம் எதிரி, எனது மகளுடன் ஒன்றாக வாழ்வதாக சொல்லியதன் பேரில் மேற்படி புகாரானது முடிக்கப்பட்டது. எனது மகளை அழைத்துச்சென்ற 1ம் எதிரி, வீட்டின் சாவி இல்லையென்று சொல்லி மூன்று நாட்கள் ஆணையம்பட்டியில் சோறு, தண்ணீர் இல்லாமல் இருந்தார். மேலும் 1ம் எதிரி, எனது மகளை அடித்ததில், எனது மகளின் வலது கண்ணில் அடிபட்டுவிட்டது, மேலும் வாய்க்கு கீழே அடிபட்டு இரத்தம் வந்த நிலையில் இருந்ததால், நான் எனது மகளை, எனது வீட்டிற்கு வா என்ற கூட்டிச்சென்றேன்.

5) 1ம் எதிரி ஈரோட்டில் வைத்து, என்னையும் அடித்துவிட்டார். மேலும் எனது மகளை பல இடங்களில், எனது மருமகன் அடித்துவிட்டார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி சத்தியராஜ் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான், எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை, எனது போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மருமகனுக்கும், எனது மருமகளுக்கு இருந்ததாக சொல்லும் தவறான தொடர்பு குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் நாங்கள் ஈரோட்டில் அவர்கள் இருவரையும் ஒன்றாகத்தான் பிடித்தோம்.

2) ஈரோட்டில் எந்த இடத்தில், எத்தனை மணிக்கு அவர்களை பிடித்தோம் என்றால் ஈரோடு பெருந்துறையில் உள்ள அப்புச்சி மடத்தில் அவர்கள் இருவரையும் பிடித்தோம். எனது மருமகன், என்னை ஈரோட்டில் அடித்ததாக சொல்லும் சங்கதியை பொறுத்து நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

3) எனது மருமகன், என்னை அடித்ததாக சொல்லும் நிலையில் நான் ஈரோட்டில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை,

பெரம்பலூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பெரம்பலூர் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதாக சொல்லும் நிலையில், அதற்குரிய மருத்துவ ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) எனது மருமகன் அடித்ததில், எனது மகள் ஈரோடு பெருந்துறையில் உள்ள மருத்துவமனையில் அட்மிட் ஆனாரா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1 எனது மகள் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி நித்யா தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளும், 1ம் எதிரிக்கும், எனது மகளுக்கும் இடையே நடைபெற்ற சம்பவங்கள் குறித்து எனக்கு, எனது மகள் சொல்லித்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் கேள்விபட்டதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 எனது மகள் என்பதால், அவர் சொல்லிக்கொடுத்தவாறு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.45 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.13 17:41:17 +0530

Judicial Magistrate No.2, Attur.